# சுவிஸிலுள்ள தமிழர்களுக்காக தெற்கில் முகாம் அமைக்கும் எண்ணமில்லையென அறிவிப்பு

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 21-12-85 சனிக்கிழமை (மார்கழி 6 ரபியு ஆகிர் 8) முழக்கம் 316

சுவிட்சர்லாந்தில் புகலிடம் கோரியுள்ள இலங்கைத் தமிழர்கள் எவரையும் திருப்பி அனுப்பவேண்டாம் என்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள சுவிஸ் குழுவினரை நேற்றுச் சந்தித்த இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் தலைவர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது. சுவிட்சர்லாந்திலும் பல்வேறு பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுவதால் இவ் இளைஞர்களை வைத்துப் பராமரிப்பது சுவிஸ் அரசுக்கு பெரிதும் சிரமமாக இருப்பதாக சுவிஸ் குழுவினர் மதத் தலைவர்களுக்கு எடுத்துக் கூறினர்கள். எனினும் தென்னிலங்கையில் முகாம் ஒன்றை அமைத்து அங்கு இவ் இளைஞர்களை அனுப்புவது பற்றி சுவிஸ் அரசாங்கம் எவ்வித தீர்மானத்தையும் எடுக்கவில்லை எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தார்கள். இங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறிந்த பின்னர் தாம் தெரிவிக்கும் ஆலோசனைகளுக்கமையவே இது சம்பந்தமான இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் அவர்கள் கூறினர்கள். சுவிஸ் அரசு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைத் தாம் உணர்வதாகவும், எனினும் இவ் இளைஞர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டால், அவர்கள் —6ஆம் பக்கம் பார்க்க.

★ மூன்று ஹெலிகப்டர்கள் நான்கு மணித்தியாலங்களாக தாழப் பறந்து -

# கொழும்புத்துறை, அரியாலையில் வானத்திலிருந்து தொடர் சூடு!

## இருவர் மரணம்; இரு பெண்கள் படுகாயம் அச்சத்தால் மக்கள் வீடுகளை விட்டு ஓட்டம்

(அலுவலக நிருபரும், அரியாலை நிருபரும்)

அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளை நேற்று நண்பகல் முற்றுகையிட்ட ராணுவத்தினர்,புங்கன்குளம் புகையிரதநிலையப் பகுதியில் தொடர்ச்சியாக மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினல் இருவர் மரணமானதாக தெரியவந்துள்ளது. படுகாயமடைந்த இரு இளம் பெண்கள் சூட்டுக்காயத்துடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். வானத்தில் மூன்று ஹெலிகப்டர்கள் பறந்து பல மணிநேரமாக கண்காணிப்புச் செலுத்திய வேளையில் தொடர்ச்சியாக அவற்றிலிருந்து துப்பாக்கி வேட்டுகளும் தீர்க்கப்பட்டன.

கொழும்புத்துறையிலுள்ள பேக்கறியொன்றில் கடமையாற்றும் பழனி இந்திரன் (17) என்பவரும், மேசன் தொழிலாளியான ஆசை என்பவருமே சூடுபட்டு மரணமானவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

அரியாலையைச் சேர்ந்த ஜீவதாம்பாள், கொழும்புத்துறையைச் சேர்ந்த ம.கலாவதி (16) ஆகிய இருவருமே ஆஸ்பத்திரியில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட சில இடங்களில் இரத்தம் பெருக்கெடுத்தோடிக் கிடக்கக் காணப்பட்டது. மேலும் பலர் படுகாயமடைந்திருக்கலாம் அல்லது மரணமாகியிருக்கலாமென அஞ்சப்படுகின்றது.

நண்பகல் 12-30 மணியிலிலிருந்து கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய ... 6ம் பக்கம் பார்க்க

### ராணுவ வீரர் படுகாயம்

கொழும்புத்துறை, அரியாலைப் பகுதியில் நடைபெற்ற சூட்டுச் சம்பவத்தில் படுகாய - 6ம் பக்கம் பார்க்க

## தொண்டமான் - ஜனதிபதி நேற்றும் சந்தித்து பேசினர்

அமைச்சர் எஸ். தொண்டமானும், ஜனதிபதி ஜெயவர்த்தனவும் நேற்றும் மூன்ருவது நாளாக தொடர்ச்சியாக சந்தித்துப் பேசினர்கள். மலையக மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்கும் விடயத்தில் இணக்கம் காணக்கூடியதாக பேச்சுக்கள் இடம்பெற்றதாகத் தெரிகின்றது.

## மருத்துவ மாணவி கடத்தல் வான் விபத்தால் தோல்வி

(குருநகர்)

வட பகுதி தனியார் மருத்துவ கல்லூரியில் கல்வி பயிலும் மாணவி ஒருவர் நேற்று பட்டப்பகலில் இனம் தெரியாதவர்களால் கடத்தப்பட்டாராயினும், கடத்திச்செல்ல பயன்படுத்தப்பட்ட வாகனம் வழியில் விபத்தில் சிக்கியதால் அந்த மாணவி தப்பமுடிந்தது.

மாணவி உரத்துச் சத்த — 6-ம் பக்கம் பார்க்க

## நீதவானை அவமதித்தாராம்! ஊர்காவற்படையில் ஒருவர் பொலிஸாரால் கைதானர்

(திருமலை)

நீதவான் ஒருவரை அவர் நீதவான் எனத் தெரிந்தபின்னரும் அவமரியாதை செய்த ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவர் நேற்று பொலிஸாரால் கைதானர்.

மூதூர் இறங்குதுறைக்கு அண்மையில் நடைபெற்ற இச்சம்பவத்தில் அலாவுதீன் என்பவரே கைதானவராவர்.

...6ம் பக்கம் பார்க்க

## வடமராட்சிப் பகுதியிலும் காலை முதல் ஆகாய வேட்டுகள்!

(உடுப்பிட்டி)

வடமராட்சிப் பகுதியில் நேற்றுக் காலை முதல் ஹெலிகப்டர்கள் ஒன்றன்பின் ஒன்ருக வட்டமிட்டு, ஆகாயத்திலிருந்து வேட்டுகளைத் தீர்த்ததால் இப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

பொலிகண்டி, திக்கம் பகுதிகளிலேயே பல மணி நேரம் இந்நிலை ஏற்பட்டது. துப்பாக்கி வேட்டுகளும், குண்டுகளும் கீழ் நோக்கி வந்ததால் அப்பகுதி மக்கள் கரவெட்டி, நெல்லியடி பகுதிகளுக்குச் சென்று தஞ்சம் புகுந்தனர்.

இச் சம்பவங்களினல் பலர் படுகாயமடைந்திருக்கலாம் அல்லது மரணமடைந்திருக்கலாமென அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பகுதி நேற்றுக் காலை போக்குவரத்து மட்டுமன்றி, எந்தத் தொடர்புமின்றி துண்டிக்கப்பட்டிருந்தது.

## ஹெலிகப்டர் பதற்றத்தால் பெண்கள்மீது வான் ஏறியது

அரியாலைப்பகுதியில் ஹெலிகப்டரிலிருநது நேற்று நணபகல் துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டபோது, யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மினிபஸ் ஒன்றிலிருந்து பயணிகள் அவசரப்பட்டு இறங்கியபோது ஏற்பட்ட விபத்தில் இரண்டு பெண்கள் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

நுணுவிலைச் சேர்ந்த ரீ. ரேவதி (21), மங்கையற்கரசி (41) ஆகிய இருவருமே படு —6-ஆம் பக்கம் பார்க்க

### படையினர் குழப்பக் கூடாது

(புதுடில்லி)

இலங்கையின் இனப் பிரச்சினைகு நல்லதொரு தீர்வு ...6ம் பக்கம் பார்க்க

### மகனுக்கும் மரண தண்டனை

(திருமலை)

கட்டைபறிச்சானில் யோகேஸ்வரன் என்ற இளைஞ ...6 ம் பக்கம் பார்க்க

## இசை நடன ஆசிரியருக்கு அளுத்கமவில் 29-ல் பயிற்சி

இசை, நடன ஆசிரியர்களாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான முன் சேவைப்பயிற்சி இம் மாதம் 29 ஆம் திகதி அளுத்கம ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆரம்பமாகவுள்ளது.

இதற்குத் தெரிவானவர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும், கிடைக்காதவர்கள் கல்விச் சேவை ஆணைக் குழுவுக்கு நேரில்வந்து கடிதங்களைப் பெற முடியு ...6 ம் பக்கம் பார்க்க

## யாழ். தபாலகத்தில் ரி. வி. லைசன்ஸ்வழங்கல் நிறுத்தம்

யாழ்ப்பாணம் தபால் நிலையத்தில் 23-ம் திகதி திங்கட்கிழமை முதல் 1986ஆம் ஆண்டுக்கான தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது. இதற்குப்பதிலாக பொலிஸ் நிலைய வளவிலுள்ள தபால் நிலையத்தில் இவை வழங்கப்படும்.

காலை ஒன்பது மணி முதல் நண்பகல் பன்னிரண்டு மணி வரையுமே இந நிலையம் திறந் ... 6 ஆம் பக்கம் பார்க்க

தமிழ் மக்கள் விரும்பிப் படிக்கும் பத்திரிகை ஈழமுரசு

புதிய அதிபர் மூலம்

# ஹாட்லிக் கல்லூரியின் பெருமை நிச்சயம் பேணப்படும்!

(புலோலி)

"பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பல நிர்வாக அதிகாரிகளை, விஞ்ஞானிகள், அறிவாளிகளை உருவாக்கி வருகின்றது. ஹாட்லிக் கல்லூரி தொடர்ந்தும் தனது பாரம்பரியங்களைப் பாதுகாத்து நிலைநிறுத்த புதிய அதிபர் திரு. பாலசிங்கம் சிறந்த நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்பது நம்பிக்கையாகும்"

இவ்வாறு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபராகப் பதவியேற்றுள்ள திரு பீ. பாலசிங்கத்தை வரவேற்று கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தால் நடாத்தப்பட்ட கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றிய சங்கத் தலைவர் சட்டத்தரணி ஆர். உருத்திரா குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில். வணக்கத்துக்குரிய ஹாட்லி அவர்கள் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை ஆரம்பித்த காலம் தொடக்கம் அறிவுத் திறன் படைத்த பெருமக்களே கல்லூரியின் அதிபர்களாகக் கடமையாற்றி வந்துள்ளனர். தற்பொழுது இன்றைய இக்கட்டான நிலைமையிலும் திரு. பாலசிங்கம் இக்கல்லூரியின் அதிபர் பதவியைத் துணிவுடன் பொறுப்பேற்றுள்ளது வரவேற்கப் படவேண்டிய தாகும். அவருக்கு இத்துணிவை இக்கல்லூரியே மாணவ பருவத்திலிருந்து வளர்த்து வந்துள்ளது.

இதுவரை காலமும் ஹாட்லிக் கல்லூரி பாதுகாத்து வளர்த்து வந்த கல்லூரியின் பாரம்பரியத்தையும, தனித்துவத்தையும், புதிய அதிபர் பாதுகாத்துக்கொள்வார் என்பது நம்பிக்கையாகும்'' என்றார்.

பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவர் டாக்டர். ஏ. பாலகிருஷ்ணன் உரையாற்றுகையில் புதிய அதிபர் தலை சிறந்த அறிவாற்றல்மிக்க குடும்பத்திலே தோன்றியவர் என்றார்.

திரு. சி. பாலசிங்கம் (ஜே. பி.) உரையாற்றுகையில், ஹாட்லிக்கல்லூரிக்கு சிறந்த அதிபர் ஒருவர் கிடைத்திருப்பது மகிழ்ச்சிக்குரியது என்றார்.

## வலைப்பந்தாட்ட பயிற்சி முகாம்

(புலோலி)

வடபகுதி வலைப்பந்தாட்டச் சங்கத்தின் புனருத்தாரணம் கருதி நடாத்த இருக்கும் "நொக்அவுட்" முறையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகளை நடாத்துவதற்கு முன்பான வலைப் பந்தாட்டப் பயிற்சி முகாமொன்று வட-இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இவ்வலைப் பந்தாட்ட பயிற்சி முகாமில் வடமராட்சிப் பகுதியல் உள்ள விளையாட்டுக் கழகங்களின் வலைப் பந்தாட்ட வீராங்கனைகள், கல்லூரிகளின் வலைப்பந்தாட்ட வீராங்கனைகள் உட்பட 100 பேர் கலந்து கொண்டனர்,

இப்பயிற்சி முகாமிலே யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கச் செயலாளர் திருமதி. பீ. றுபசிங்கம் (கோப்பாய் விளையாட்டதிகாரி) யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்க பொருளாளர் திருமதி. ஸ்ரீவசந்தி கெங்கேஸ்வரன் (பருத்தித்துறை கரவெட்டி விளையாட்டதிகாரி) பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர கல்லூரி அதிபர் திருமதி. அரியரத்தினம், வட-இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி. சுப்பிரமணியம் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

## திருத்தப்பட்டது

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை யாழ்/வல்வை மகளிர் கல்லூரி பேல்மாடிக் கட்டடம், நெடிய காட்டில் நடந்த இராணுவத் தாக்குதலின்போது இராணுவத்தினரின் பீரங்கித் தாக்குதலால் சேதமுற்றது. அது அக் கல்லூரி அதிபர் திருமதி ஏ. ருக்மணி, பெற்றோர் ஆசிரியர் சங்க உதவியுடன் திருத்தியமைக்கப்பட்டுச் சேதமுற்ற வெளி கேற்றும் சீராக்கப்பட்டுள்ளது.

## ★ பிறந்த நாள் வாழ்த்து ★

※ மாதகல் மேற்கு, நவரத்தினம் திலகராணி தம்பதியின் மகன் கங்கைதாஸன் நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ மூளாய், செல்லத்துரை இந்திராணி தம்பதியின் மகள் சசிரேகா முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ யாழ்ப்பாணம் கோவில் வீதி. ராசநாயகம் சிறிகாந்தி தம்பதியின் மகள் ஜெனட் ஜெனேவா இன்று பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ கிளிநொச்சி இராமநாதபுரம், இராசரத்தினம் பவளம் தம்பதியின் மகன் இளங்கோவன் பத்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ கந்தரோடை, சுப்பிரமணியதாஸ் செல்வநாயகி தம்பதியின் மகன் மயூரதன் ஆறாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ நல்லூர் அரசடி றோட், சிவகுரு சரஸ்வதி தம்பதியின் மகள் றெஜினு இன்று பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ நவாலி தெற்கு, ஜோர்ஜ் ஜிங் விமலாதேவி தம்பதியின் மகன் ஜோர்ஜ்சுவில்சன் முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ தென்மட்டுவில், மகாலிங்கம் கமலாதேவி தம்பதியின் மகள் செந்துஷா நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ காரைநகர், சதாசிவக்குருக்கள் கனகசுந்தரி தம்பதியின் மகள் வேதநாயகி இன்று பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ கிளிநொச்சி இரணைமடு, பாலசுப்பிரமணியம் தம்பதியின் மகன் கிரிதரன் இன்று பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## மன்னார் ரயில் சேவை

கடந்த பல மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மன்னார், அனுராதபுரம் ரயில் சேவை இன்று முதல் ஆரம்பமாகின்றது.


விழாக் காலச் சலுகை!

15-12-85 — 30-1-86 வரை

உங்கள் முதலீடு 3 வருடங்களில்



இரண்டு மடங்காகிறது

விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளுங்கள்

தனித்துவமான 36% வட்டி முதிர்வுநிலை வைப்புகளுக்கு வழமைபோல் நீங்கள் பெறலாம்

நம்பிக்கை! நாணயம்! பாதுகாப்பு!

யாழ்-தமிழர் நிதியம்

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22437

(மனோகரா தியேட்டருக்கு அருகாமையில்) (பி 947)

# கலகம் ஏற்படுத்துவதற்கு சமூக விரோதிகள் முயற்சி

## வாழைச்சேனைப் பகுதியில் சம்பவம்

(கல்குடா)

மீன் வியாபாரி ஒருவரது கொலையைச் சாதகமாகப் பயன்படுத்தி ஓட்டமாவடி, வாழைச்சேனைப் பகுதிகளில் மீண்டும் ஒரு தமிழ்-முஸ்லிம் கலவரத்திற்கு வித்திட மேற்கொள்ளப்பட்டு வந்த திரைமறைவு முயற்சியை கோறளைப்பற்று பிரஜைகள் குழு கண்டுபிடித்துள்ளது.

மேற்படி பகுதிகளில் சகோதரர்களாக வாழ்ந்து வரும் தமிழ்- முஸ்லீம்களுக்கிடையே பிளவை ஏற்படுத்துவதற்கு சமூக விரோத சக்திகள் எடுத்து வரும் முயற்சிகள் தோல்வி கண்டு வருகின்றன.

கடந்த வாரம் நான்கு குழந்தைகளின் தந்தையான ஓட்டமாவடி வாசியான நூர் முகமட் எனப்படும் மீன் வியாபாரி மான்கேணிக்கு தொழில் நிமித்தம் சென்றிருந்த ராம். மறு நாட்களில் வீடு திரும்பாமையால் தீவிரவாதிகள் கடத்திச் சென்று விட்டதாகவும்; விடுவிக்கக் கோரி பொது மக்களைக் ஹர்த்தால் மேற்கொள்ளுமாறு சமூக விரோதிகள் தூண்டியதாகவும், ஊர்ப் பிரமுகர்களின் தலையீட்டால் பின்பு கைவிடப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

பிரஸ்தாப வியாபாரியை சமூக விரோத சக்திகளே கொலை செய்து விட்டு பொது மக்களிடையே வன்முறையைத் தூண்டுவதற்கு முயன்றதையிட்டு கோறளைப்பற்று பிரசைகள் குழு கண்டனம் தெரிவித்துள்ளது. இக்குழு இது தொடர்பாக அப் பகுதிகளில் நிலைமையை பொது மக்களுக்கு தெளிவு படுத்தி சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது.

பிரஸ்தாப சுவரொட்டியில் கொலைக்கு காரண கர்த்தாக்களை கண்டு பிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளதாகவும், இந்நடவடிக்கைக்கு ஆதரவளிக்குமாறும் சுவரொட்டிகள்மூலம் மேலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### முழுமையான கொடுப்பனவுகள்

# இவர்களுக்கு இதுவரை இல்லை என பரிதாப முறைப்பாடு

(வேலணை)

வேலணைப் பெருந்தெருக்கள் திணைக்களத்தில் சமயா சமய ஊழியர்களாக இருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட சகல ஊழியர்களுக்கும் இதுவரை முழுமையான கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லையென புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாசி மாதம் முதல் இவ்வூழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு பதினொரு மாதங்கள் கடந்தும் இவர்களுக்கு இக்கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. இதுபற்றி வேலணை பெருந்தெருக்கள் திணைக்கள நிறைவேற்றுப் பொறியியலாளரிடம் மேற்படி வேலையிழந்த ஊழியர்கள் கேட்டபோது, இதுசம்பந்தமாக இதுவரை மேலிடத்திலிருந்து அறிவித்தலொன்றும் வரவில்லையென கைவிரித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறு இருக்க, அடுத்த வருடம் மாசி மாதம் தொடக்கம் பெருந்தெருக்கள் திணைக்களம் அதிகார சபையாக மாற்றமடைகின்றது. அதற்கு முன் இக்கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், உயர் அதிகாரிகள் இவர்கள் விடயத்தில் அக்கறையில்லாமல் இருப்பது விசனத்திற்குரிய தென்றும் இவ்வாறு பாதிக்கப்பட்ட ஊழியர்கள் நமது நிருபரிடம் கவலை தெரிவித்துள்ளனர்.

### ★ ஒரு கடிதம்

# பலாலி ஆசிரிய கலாசாலை பரீட்சை முடிவுகள் விபரம்

ஐயா,

16-12-85ல் வெளியான தங்களின் பத்திரிகையில் மேற்படி கலாசாலையில் 1981–82 காலப் பகுதியில் பயிற்சி முடித்து வெளியேறிய விவசாயம், உடற்கல்வி, கைவினை, ஆங்கிலம் ஆகிய நெறிகளைச் சேர்ந்தவர்களது பரீட்சை முடிவுகள் வெளியிடப்படவில்லை எனவும் இதன் பின்னைய ஆண்டுகளின் நெறிகளுக்கான முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன எனவும் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக மேலும் சில தகவல்களை இக் கலாசாலையில் பயின்று முடிவுகளை இல்லாது இருப்பவன் என்ற முறையில் தர விரும்புகிறேன். 1980ல் நுழைந்து 3 வருட காலப் பயிற்சியின்பின் 1982ல் வெளியேறிய வணிகம், சமயம் (றோ. க), கைவினை போன்ற பாட நெறிகளுக்கான பரீட்சை முடிவுகளும் இன்னும் வெளியிடப்படவில்லை என்பதனையும் தங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்.

இக்கலாசாலையில் மட்டுமே இவை போன்ற பரீட்சை முடிவுகள் வெளியிடப்படாது உள்ளது. இதன் நிர்வாகக் குறைபாடுகளும், அக்கறையின்மையுமே இதன் முக்கிய காரணமாகும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன், இக்காலப் பகுதியில் மேற்படி கலாசாலையின் நிர்வாகப் பிழைகளால் மேற்படி நெறிகளில் பயின்ற நூற்றுக்கணக்கான ஆசிரிய மாணவர்கள் ஓயாத கவலையுடனும் விரக்தியுடனும் இருக்கிறார்கள் என்பதையும் ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விப் பிரிவு இது தொடர்பாக தகுந்த நடவடிக்கை எடுத்து, சம்பந்தப்பட்ட கலாசாலையின் பரீட்சை முடிவுகளை, பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிட நடவடிக்கை எடுக்கும்படி வேண்டுகிறேன்.

இப்படிக்கு,
பாதிக்கப்பட்ட ஆசிரியன்,
மு. சொர்ணலிங்கம்.
(வணிகநெறி)

### வல்வை வர்த்தகர் சங்கத் தலைவர் பேச்சு:

# வர்த்தகர்கள் ஒன்று திரண்டால் மட்டுமே பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும்!

(வல்வெட்டித்துறை)

“ஒரு கையை தட்டும் பொழுது அதிக ஓசை எழமாட்டாது, பல கைகள் தட்டும் பொழுது அதிக ஓசை கேட்கும். அது போல வர்த்தகர்களாகிய நாம் பல தரப்பட்ட இன்னல்களுக்கு ஆளாகினோம், அந்த வேளைகளில் தனிப்பட்ட ஒரு வர்த்தகர் எதையும் சாதித்துவிட முடியாமல் திண்டாடப்படுவதை நாம் நன்கு உணரக் கூடியதாக, கண்ணுரக் காணக்கூடியதாக இருக்கிறது. உதாரணமாக எடுத்ததற்கெல்லாம் கடையடைப்பு, ஹர்த்தால் போன்ற சந்தர்ப்பங்களில் தனி வர்த்தகரின் அபிப்பிராயம், செயல் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஒரு நஷ்டம் ஏற்பட்ட பொழுது அதனை ஈடுசெய்வது கஷ்டமாக இருக்கிறது. எமது பிரிவில் ஒரு முக்கியமான பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டால் ஒரு தனிப்பட்ட வர்த்தகர் அதனைப் பெற்றுக்கொள்ள எத்தனை சிரமங்களுக்குள்ளாக வேண்டிய நிலை ஏறபடுகிறது' இவை மட்டுமல்ல இன்னும் எத்தனையோ பல விஷயங்களை நாம் இச்சங்கத்தின் மூலமாக நிவர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும்''

இவ்வாறு வல்வெட்டித் துறையில் நகர சபை பிரிவில் உள்ள சகல வர்த்தகர்களும் கூடி 'வல்வைவர்த்தகர் சங்கம்' -ஒன்றை அமைத்து அதன் உறுப்பினர்களைத் தெரிவு செய்து அங்கு ரார்ப்பணம் செய்தபொழுது சங்கத் தலைவர் திரு. மு. பிறேம்குமார் மேற் கண்டவாறு கூறினர்.

இச்சங்கத்திற்கான சட்ட திட்ட விதிமுறைகள் அடங்கிய யாப்பு ஒன்றினை அடுத்த கூட்ட நிகழ்ச்சியில் சமர்ப்பிப்பதென முடிவானது. ஒவ்வொரு பிரிவிற்கும் ஒவ்வொரு உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டனர்.

புத்தக வியாபாரம்: திரு. கு. அப்பாத்துரை, மின் உபகரணம் திரு. அருண், பலசரக்கு: திரு. திருக்குட்டி, தேநீர்க் கடை: திரு. சி. சோமசுந்தரம். சிகை அலங்கார பிரிவு: திரு. அந்தோனிப்பிள்ளை. படப்பிடிப்பு. திரு. ஞானச் சந்திரன்: சைக்கிள்கடை: திரு. குணலிங்கம். ஜவுளிக்கடை: திரு ச. சிவகுமார். சலவைக் கடை: திரு. மகேந்திரம், மருந்துக்கடை: திரு. அமிர் தாஸ். எரிபொருள்: திரு. ரெத்தினகுமார் பேக்கறி: திரு. சி. சீவரத்தினம். செயலாளராக திரு. செ. யோகமனோகரன், கணக்காய்வாளர்: திரு. சி. சோமசுந்தரம் (சோமண்ணு) பொருளாளர்: திரு. ர/மு ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# கோப்பாய் தெற்கின் தேவை நிவர்த்திக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்குக் கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. எம். சே. இளையப்பு ஜே. பி., இப் பகுதி ஒழுங்கைகளின் திருத்த வேலைகள், மின் இணைப்புகள் குறித்து வலி–கிழக்கு உதவி அரசாங்க அதிபருக்கு விரிவான மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அம்மகஜரில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது: கோப்பாய் உப அலுவலகத்தைச் சேர்ந்த ஏழாம் வட்டாரப் பகுதியில் யாழ். பருத்தித் துறை வீதியையும், பழைய வீதியையும் இணைக்கும் பிரதான ஒழுங்கைகளான பெரிய ஒழுங்கை, பழைய பொலிஸ் நிலைய ஒழுங்கை, உப அலுவலக அருகாமை ஒழுங்கை ஆகிய இவ் ஒழுங்கைகளில் முக்கியமாக மழை பெய்யும் காலங்களில் அப் பகுதிக் குடியிருப்பாளர்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத கஷ்டங்களை அனுபவித்து வருகின்றார்கள்.

அரசினால் பலவிதமான அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கி மக்கள் வளமாக வாழ வேண்டுமென செயல்படுத்தப் பட்டுவரும் இக் காலத்தில் மக்களின் இவ் வகையான குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படவேண்டியது மிகமுக்கிய கடமையாகும்.

குறிப்பிட்ட ஒழுங்கைகளுக்கு இதுவரை மின் இணைப்புச் செய்யப்படவில்லை. அதன் காரணமாக இவ் ஒழுங்கைகள் மிகவும் இருள் சூழ்ந்த இடங்களாக இருப்பதால் இரவுநேரங்களில் திருடர்களின் நடமாட்டங்களுக்கும் போதிய வசதியாக இருக்கின்றது.

எனவே, இதன் பிரகாரம் குறிப்பிட்ட பகுதியில் குடியிருப்பவர்களின் பல்வேறு வகையான நலன்களை முன்னிட்டும், 1986 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டில் குறிப்பிட்ட ஒழுங்கைகளின் திருத்த வேலைகளையும் குறிப்பிட்ட ஒழுங்கைகளின் மின் இணைப்புகளையும் செய்துகொள்வதற்கு ஆவன செய்து உதவும்படியாக மக்களின் சார்பாக மிகவும் பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

### கிராமப்புற மக்கள் ஆரம்ப

# சுகாதார நிலையப் பயன்பாடு பெறுவதில் தயங்கலாகாது

(வேலணை)

“நமது நாட்டில் கிராமம் தோறும் சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட்டு முழுமையாக செயல்பட்டு வந்தால் நமது மக்கள் நோய் நொடியின்றி சுகமாக இன்ப வாழ்க்கையை நடாத்தலாம். எம் மக்கள் நோய் நொடியின்றி சுக வாழ்வு வாழ வேண்டும் என்னும் நோக்கிற்காகத் தான் இவ்வாறு ஆரம்ப சுகாதார நிலையங்கள்அமைதிக்கப்பட்டு வருகின்றது.”

இவ்வாறு புளியங்கூடல் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற ஆரம்ப சுகாதார நிலைய திறப்பு விழா வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய சுகாதாரப் போதனாசிரியரும், சுகாதார சேவைகள் பிரநிதிப் பணிப்பாளருமாகிய திரு. கா. வைத்தீஸ்வரன் தெரிவித்தார்.

திரு. நாகராஜா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பிரதிப்பணிப்பார் திரு. வைத்தீஸ்வரன் தொடர்ந்து பேசும் போது, “கிராமப்புற மக்களுக்கு பெரும்பாலும் நல்ல சுகாதார வசதிகள் கிடைப்பது அரிது. இம்மக்கள் நமது சுக நலன்களை பேணுவதன் மூலம் ஆரோக்கிய மக்களாக வாழ கூடியதாக இருக்கும். ஒவ்வொரு மக்களும் இச்சுகாதார நிலையத்துக்குச் சென்று ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுதல் நன்மைபயக்கும். கிராம சுகாதாரமே அக்கிராமத்தின் ஆரோக்கியத்துக்கு அத்திவாரமாகும். எனவே மக்கள் யாவரும் ஆரம்ப சுகாதார அடித்தளத்தை கவனமாகக் கடைப்பிடித்தல் வேண்டும்'' என்றார்.

ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் செல்வி. லலிதாம்பிகை கதிர்காமலிங்கம் பேசும் போது:-, இந்நிலையத்தை இன்று ஆரம்பித்து வைப்பதன் நோக்கம் மக்கள் தமது சுகாதாரத்தை தாமே பேணிக் கொள்வதற்கு ஊக்கமும் உதவியும் செய்து கொடுப்பதற்காகவே, எடுத்ததெற்கெல்லாம் ஆஸ்பத்திரிகளுக்கு செல்லாமல் இந்நிலையத்தின் மூலமே சிறந்த வைத்திய சேவைகளைப் பெறக்கூடியதாக இருக்கும். இதற்காக உத்தியோகஸ்தர்கள் உள்ளனர். கிராம மக்கள் அடிப்படை சுகவாழ்வையறிந்திருந்தல் அவசியம் அதன் மூலம் தாம் நன்மையடைவதுடன் ஏனையவர்களுக்கும் பெரும் உதவி செய்யக் கூடியவர்களாக இருக்கலாம். இந்நிலையங்கள் மக்களுக்கு சுகாதார வசதிகளை அளிப்பதுடன் சுகாதாரப் போதனைகளையும் நடாத்தவும் உள்ளது

எனவே இதனை ஒவ்வொருவரும் பயன்படுத்தி ஆரோக்கியமான சமுதாயத்தை கட்டியெழுப்ப வேண்டும்'' என்றார்.

இவ்வைபவத்திற்குத் தலைமைவகித்து உரையாற்றிய திரு. நாகராஜா “புளியங்கூடல் கிராமத்தின் அத்தியாவசிய தேவை இன்று திறந்து வைக்கப்படும் ஆரம்ப சுகாதார நிலைய மூலம் நிறைவேற்றி வைக்கப்பட்டுள்ளது. இக் கிராம மக்களுக்கு வைத்திய வசதி பெற வாய்ப்பில்லாமல் இதுவரை இருந்து வந்துள்ளது. எனவே இந்நிலைய மூலம் உங்களது ஆரோக்கியத்தை பேண நடவடிக்கை எடுக்க வேண்டும். அடிப்படையான சுகாதாரத்தையும் ஆரம்ப சுகாதாரத்தையும் இதன்மூலம் பெற்றுக் கொள்ளுதல் நன்மை பயக்கும்'' என்றார். மற்றும் பலரும் இங்கு உரையாற்றினர்.

வியாபாரம்பெருக
விளம்பரம் செய்க

முக்கிய அறிவித்தல்
“பிற்றர்”
FITTER (FABRICATER)
உடன் தேவை
அத்துடன் ஈராக்கிற்கு வேலைவாய்ப்பு தேடி பாஸ்போட் பிரதி கொடுத்தோர் “விசா” விடயமாக உடன் பாஸ்போட்டுடன் நேரில் வந்து சந்திக்கவும்.
எஸ். பி. நடராசா,
S. P. Nadarajah,
R/15201
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

### உதய சிந்தனை

மனச்சாட்சி என்னும் உயர்ந்த சுடர்ப் பொறியை இதயத்தில் என்றும் ஜீவித்திருக்கும்படி முயலவேண்டும்.

-ஜார்ஜ் வாஷிங்டன்

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

## இதய ஒலி

21-12-85 சனிக்கிழமை ( குரோதன ) மார்கழி-06

# அரங்கேற முடியாத சூழ்ச்சிப் படலம்

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகளில் புதியதொரு திருப்பம் ஏற்பட்டுள்ளதை, கடந்த இரண்டு நாட்களாகப் பத்திரிகைகளைப் படிப்பவர்களால் புரிந்து கொண்டிருக்க முடியும்.

இது தொடர்பான இணக்கப் பேச்சுவார்த்தையை, அல்லது இணங்கவைப்பதற்கான பேச்சுவார்த்தையை மிகவும் சாதுர்யமாக மீண்டும் இலங்கையிலேயே நடத்துவதற்கு எடுக்கப்பட்டு வரும் முயற்சிகள் இப்போது தெரியவந்துள்ளது.

ஒரு வருடமாக இழுத்தடிக்கப்பட்ட சர்வகட்சி மாநாட்டுக்கு என்ன நடைபெற்றது என்ற அனுபவத் தழும்புகள் மாறுவதற்கு முன்னர், மீண்டும் கொழும்பு என்ற ''சிதம்பர சக்கர'' சகதிக்குள் தமிழர் விடுதலைக் கூட்டணியை வீழ்த்தி எழுப்ப அரசியல் நாடகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

டில்லி, திம்பு, ஓமான், டாக்கா என்ற தென்கிழக்காசிய தலைநகர்களில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் எந்தவொரு முடிவையும் இன்னமும் பெற்றுக் கொடுக்கவில்லை.

சாப்பாட்டு மேசைகளும், தேநீர்க் கோப்பைகளும் பேச்சுவார்த்தைக் களங்களாக மாறி, மாகாண, மாவட்டசபைகளைச் சுற்றியே வட்டமிட்ட போதிலும், தமிழீழக்குழுக்கள் தமது சுதந்திர தாகத்திலிருந்து விடுபடவில்லை

அதே நேரத்தில் தமிழீழப்பகுதியில் அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டு, தமிழர் தலைகள் எண்ணப்பட்டு சனத்தொகை குறைக்கப்பட்டு வந்தமையால், பேச்சுவார்த்தைகளைத் தொடரமுடியாத நிலை ஏற்பட்டது.

திம்புப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த போதிலும், பேச்சுவார்த்தைகள் முடிவடைந்ததாக பாரதம் கருதவில்லை.

அதனை மீண்டும் தொடருவதற்கு பாரத அரசு எடுத்த நடவடிக்கைகளால் டில்லியில் சந்திப்புகளை ஏற்படுத்த ஒழுங்கு செய்யப்பட்டவேளையில், கூட்டணித் தலைவர்களை கொழும்பில் தனிமையில் அழைத்துப் பேச்சு நடத்த இலங்கை அரசு நாட்டம் கொள்வது எதற்காக?

கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் இதற்கு அளித்துள்ள பதில், இலங்கையின் தந்திரத்தை வெளிப்படுத்தி, அதன் முகமூடியைக் கிழிப்பதாகவுள்ளது.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியா பல வருடங்களாக ஓய்வு ஒழிச்சலின்றி எடுத்துவரும் முயற்சிகளையும், ஒரு லட்சம் ஈழத் தமிழ் அகதிகளை எத்தனையோ நெருக்கடிகள் மத்தியில் பாதுகாப்பாக வைத்துப் பராமரித்து வருவதையும் உலகமே அறியும்.

அமெரிக்கா, பிரிட்டன் உட்பட சகல நாடுகளுமே இவ்விடயத்தில் இந்தியா எடுத்துவரும் சமரசத்தீர்வு நடவடிக்கைகளை வரவேற்றுள்ளதுடன், இந்தியாவின் மத்தியஸ்தத்துக்கு அங்கீகாரமும் வழங்கியுள்ளன.

இதனால், இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவின் தலையீட்டை இலங்கை உளமார விரும்பாத போதிலும், உலகத்தின் பார்வையில் '' நல்லபிள்ளைப் '' பெயர் எடுப்பதற்காக இந்திய அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வந்ததுடன், அதன் ஆலோசனைகளுக்கு செவிமடுப்பது போல நாடகமாடியும் வந்தது.

தன்னால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வு யோசனைகளுக்கு, தமிழீழக் குழுக்கள் மாற்றுயோசனை சமர்ப்பிக்காத நிலைமையைத் தனக்குச் சாதகமாக்கி, பாரத அரசையும் விடுதலைக் குழுக்களின் தலைவர்களையும் 'கொழுவி' விடவும் எத்தனித்தது.

ஆனால் கூட்டணியினர் சமர்ப்பித்த மாற்று யோசனை சகல சதிகளையும் புஸ்வாணமாக்கிவிட்டது.

இந்த நிலையில் இலங்கை அரசின் பதிலை இந்தியா நெருக்கத் தொடங்கியுள்ளது

இதனால் இந்தியாவை இவ்விவகாரத்திலிருந்து மெதுவாக அகற்றி விடுவதற்காகவே இலங்கை அரசு கூட்டணியினரைக் கொழும்புக்கு அழைக்கிறது என்பது சொல்லித்தான் தெரிய வேண்டுமென்றில்லை.

அதுமட்டுமன்றி, தமிழீழக் குழுக்களிடையே பிளவையும் ஏற்படுத்தவே இந்தச் சூழ்ச்சிப்படலம் ஆரம்பமாக்கப்பட்டது.

பாரதத்தின் அணைப்பிலிருந்து தமிழர்களைப் பிரித்து, தனது விருப்பம் போல ஆட்டிப்படைக்க அரசு எடுத்த முயற்சியை, கூட்டணியினர் முளையிலேயே கிள்ளி விட்டது பாராட்டுதற்குரியது.

★ நேற்றைய கட்டுரையின் தொடர்ச்சி – அங்கம்: 3

# ராணுவ தீர்வைத் திணிக்க இலங்கை போராடுகிறது

நாம் தற்போது கருத்திற் கொள்ளவேண்டிய கருமம், அத்தகைய ஒரு நெருக்குதல் நடவடிக்கை உள்ளபடி பிரயோகிக்கப்படுமா அல்லவா என்பதல்ல. கொழும்பு அரசிற்கு நலம்புரியும் மேற்கு நாடுகள் கூட அதன் படைக் கலக் குவிப்பு கண்டு மனக் கலவரம் அடைந்துள்ளன என்பதே நம் கருத்தில் இடம் பெற வேண்டியதாகும். இலங்கை அரசின் இராணுவ நோக்கம் பற்றிய சான்று மேலும் வேண்டுமாயின், அதன் விமானத்தளப் புதுப்பித்தல் தொடர்பான அறிக்கைகளைப் படித்துப் பாருங்கள். ஆங்காங்கே, நீண்ட காலமாகப் பயன்படுத்தப்படாது, கவனிப்பாரற்றுக் கைவிடப்பட்டிருந்த இலங்கையின் விமானத் தளங்கள் தற்போது புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ் நாட்டிலுள்ள தமிழர் விடுதலை கெரில்லா தளங்கள், பயிற்சி முகாம்கள் என்பவற்றையிட்டு மேலும் கடுமையான போக்கைக் கடைப்பிடிக்குமாறு இந்தியாவை வெகுவாக ஊக்கப்படுத்தும் இலங்கையின் தேசிய பந்தோஸ்து அமைச்சர், திரு லலித் அத்துலத்முதலி, 'கிளர்ச்சி இலங்கைக்கு உள்ளேயே அடங்கியதனால் அதனைக் கையாள எங்களால் முடியும் எனவும், சின்னாபின்னமாகச் சிதைத்துக் கொல்லும் இலங்கை இராணுவத்தினருக்குச்சார்பாக: ''ஏதொன்றுவது சம்பவித்த கணம், அத்தறுவாயில் உணர்ச்சி வேகத்தில் செய்யப்படுவனவற்றுக்கு நான் எவ்வளவோ இடம்விட்டுக் கொடுப்பதுண்டு'' எனவும், கூறுகிறார்.

இலங்கை அரசாங்கத்தினால் தீர்க்கமாகச் செயலாற்ற முடியாது என அடிக்கடி சொல்லப்படுகிறது. போட்டா போட்டியான இரு கும்பல்களுக்கிடையில் அரசாங்கம் பிளவு பட்டிருக்கிறது என்று அதற்குக் காரணமும் காட்டப்படுகிறது. ஓர் அரசியல் தீர்வை ஜனாதிபதி ஜெயவர்த்தன விரும்பினாலும், அதனை ஈட்டிக் கொள்ளும் சக்தி அவரிடமில்லை. அரசாங்கத்திலுள்ள கடும்பிடியாளர்கள் அவருடைய விருப்பப்படி கருமம் நடத்த விடமாட்டார்கள். பௌத்த குருமாரும் அவரை விடமாட்டார்கள். கடும்பிடிக்கு அவர்களும் குறைந்தவர்கள் அல்லர்.

திருமதி பண்டாரயநாக்கவுந்தான் விடமாட்டார். பிக்குமாருடன் இப்பொழுது அணிசார்ந்துள்ள அவர், காணப்பெறும் தீர்வு எதுவும் ஒரு தேசிய மட்டத்திலான சர்வஜன வாக்கெடுப்பு அல்லது பொதுத் தேர்தல் ஒன்றின் வாயிலாக அங்கீகரிக்கப்படுதல் வேண்டும் எனக் கோரி வருகிறார். ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் செல்வீச்செல்லையை வேண்டுமென்றே குறைத்து, செய்வதறியாது திண்டாடும் நிலைக்கு அவரைக் கொண்டுவர வழிதேடி, ஈற்றில் அவரைப் பதவியினின்றும் இறக்கிவிட்டு, இவ்வாறாகத் தமது குடியுரிமைகளைப் பறித்திருந்தமைக்காகப் பழிக்குப் பழிவாங்க முயன்று கொண்டு இருக்கிறார் திருமதி பண்டாரநாயக்க.

இலங்கைத் தீவின்கண் மனித இனப் பிணக்கிற்கு நீதியான, மனிதாபிமானம் நிரம்பிய தீர்வொன்றைக் காண்பதல்ல,உள்ளூர் அரசியல் போட்டா போட்டிதான் இன்று இத்தீவினுள் நிகழ்ந்து கொண்டிருக்கும், விளையாட்டின் பெயராகும்.

எவ்வாறாயினும், இச்சிரமங்கள் என்றுமில்லாதவாறு துலாம்பரமாகக் காண்பிப்பது, கொழும்பு அரசாங்கம் பாரதூரமான பகடைக்காய் எதனையும் திம்பு ஆட்டத்தில் வைத்திருக்கவில்லை என்பதையே ஆகும். ஓர் இராணுவத் தீர்வைத் திணிக்கவே அது முயன்ற வண்ணமாக இருக்கிறது. புதுடெல்லியின் விருப்பங்களுக்கு ஒருப்படுவது போன்ற நடிப்பின் மூலம் இந்தியாவைப் பக்கச்சார்பு அற்றதாக்காமல் இந்த இராணுவத் தீர்வைத்தன்னால் நிறைவேற்ற முடியாது என்பதைக் கொழும்பு அறியும்.

கொழும்பு அரசாங்கத்தின் உள்ளக்கிடக்கையான குறிக்கோள்களைப் புதுடில்லி உள்ளபடியாக இனங்கண்டு கொள்ளத் தொடங்க வேண்டிய நாள் வந்துவிட்டது.

## இன்றைய நிகழ்ச்சி

(கொடிகாமம்)

விவசாயத் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மரம் நாட்டு விழாவும் விவசாயக் கருத்தரங்கும் மிருசுவில் புனித நிக்கிலார் ஆலய முன்றலில் இன்று சனிக்கிழமை காலை நடைபெற உள்ளது.

மிருசுவில் பங்குத்தந்தை அருள்திரு. அமிர்தகுமார் தலைமையில் நடைபெற உள்ள இவ்விழாவில் யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் சி. கிருஸ்ணபிள்ளை, சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் ச. துரைராசா, மில்க்வைற் தொழிலதிபர் க. கனகராசா, விவசாயப் போதனாசிரியர் திருமதி கா. தனபாலசிங்கம் உட்பட பலர் கலந்து கொள்வர்.

அங்கு மரக்கன்றுகளை வினியோகிப்பதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## சவூதியில் நடைபெற்ற சம்பவம்

சவூதி அரேபியாவில் பணிப்பெண்ணாக கடமை புரியும் கௌரி என்ற இந்தியப் பெண்ணுடன் தொடர்பு கொண்ட இந்தியாவைச் சேர்ந்த காதர் சுலைமான் என்ற முஸ்லிம் இளைஞருக்கு அங்குள்ள இஸ்லாமிய நீதிமன்றம் கடந்த வாரம் கல்லெறிந்து கொல்லும்படி தீர்ப்பு வழங்கியது. இந்த இளைஞர் ஏற்கனவே திருமணமானவராம். இத்தீர்ப்பை எதிர்த்து இவர் மேல் முறையீடு செய்ததால் மீண்டும் விசாரணை நடைபெற்று தான் சுற்றவாளி என சத்தியம் செய்ததால் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

இதேவேளை கௌரி என்ற பெண்ணின் கரு ஆஸ்பத்திரியில் மூன்று மாதத்தில் அழிந்ததால் அவரும் நாடு கடத்தப்பட்டார். இதனையடுத்து மேல் விசாரணையின் பின்பு காதர் விடுதலை செய்யப்பட்டார்.

## ஹர்த்தால்

(முல்லைத்தீவு)

அரியாலையில் கொலை செய்யப்பட்ட மூன்று 'புளொட்' உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்று முன்தினம் புதன்கிழமை முல்லைத்தீவுப் பகுதியில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

## இன்னல் துடைத்துவிடு!

தமிழர்க்குப் பேரழிவு தலையெடுத்த காலமிதில்
தமிழுக்கும் பேரழிவோ? தமிழன்னை தன்னுடைய
புதல்வர்க்கு நோய் வந்து புவியிற் படுத்துவதோ
என்னே கொடுமையிது இறைவா இனிமையுடன்
பையக் கவிதந்த பாவலர்க்கு வாதத்தால்
கையிழுத்துக் காலிழுத்துக் கதியற்றுப் போவதுவோ
யாரை வருத்துகிறாய் ஐயாத்துரைக் கவிஞர்
குரலெடுத்துப் பாடிட்டால் கூட்டமது சேரும்.
திறமுள்ள கவிஞர் தீராத, காதலினால்
கலைத்தாய்க்கு கோயிலதை கட்டி முடித்தவனை
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்க வைத்திட்ட
நல்லவனை துன்பத்தால் நாளும் வருத்திவிட
உள்ளமது நீ கொண்டால் உலகமது தாங்கிடுமோ
வேண்டாம் விளையாட்டு வீணான நோய் நீக்கி
நாளும் உனை வணங்கும் நல்லவனைக் காப்பாற்று
தமிழை ஈழத்தில் தலை நிமிர்ந்து பாடிட்ட
அமிழ்தக் கவிதன்னின் அடு நோய் நீக்கிவிடு
உன்தன் தாழ்வணங்கும் உரிமையதால் கேட்கின்றோம்
எங்கள் கவிஞர்தமின் இன்னல் துடைத்துவிடு.

– இ. ஜெயராஜ்-

(சுகயீனமுற்றிருக்கும்அரியாலையூர் கவிஞர் வே. ஐயாத்துரை அவர்களின் நலம் வேண்டி இன்று சனி காலை 9 00 மணியளவில் கலாநிதி அ சண்முகதாஸ் அவர்கள் தலைமையில்அரியாலை கலைமகள் ஆலயத்தில்பிரார்த்தனைக்கூட்டமொன்றை அகில இலங்கைக் கம்பன் கழகம் நடாத்துகிறது. இதனை முன்னிட்டு இக்கவிதை பிரசுரமாகின்றது.)

# கனடாவிலுள்ள சீக்கிய தீவிரவாதிகளை சட்டுப்படுத்த சட்டத்திற்குட்பட்ட சகல நடவடிக்கைகளையும் கனடா அரசாங்கம் மேற்கொள்ளும்!

## கனடா வெளியுறவு அமைச்சர் அறிவிப்பு

(புதுடில்லி)

கனடாவிலுள்ள சீக்கியத் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு கனடா அரசு அந்நாட்டுச் சட்டத்திற்குட்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் சாள்ஸ் ஜோசெப் பிளாக் தெரிவித்துள்ளார்:

கடந்த இரு தினங்களாக இந்தியாவிற்கு உத்தியோகபூர்வமான விஜயத்தை மேற்கொண்டிருந்த திரு. பிளாக் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியையும், வெளியுறவு இணை அமைச்சர் திரு. பஹுத்தையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் இதனைத் தெரிவித்தார்.

சீக்கிய தீவிரவாதிகள் விடயத்தில் கனடா அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளையிட்டு பிரதமர் ராஜீவ் காந்தி திருப்தி தெரிவித்ததாகவும் தெரிவித்த திரு. பிளாக், கனடாவிலுள்ள சீக்கியர்களில் சிறு பிரிவினரே பயங்கரவாதத்தை ஆதரிப்பதாகவும் பெரும்பாலானவர்கள் பயங்கரவாதச் செயல்களை எதிர்த்து வருவதாகவும் கூறினார்.

இந்திய வெளியுறவு அமைச்சருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது, பயங்கரவாதத்திற்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளையிட்டு இருதரப்பிலும் உடன்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கனடாவிற்கும் இந்தியவிற்கும் இடையேயான உறவில் கனடாவிலிருந்து செயற்படுகின்ற சீக்கியத் தீவிரவதிகளே பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாகவும் திரு. பிளாக் தெரிவித்தார்.

சில மாதங்களுக்கு முன்னர் கனடாவிலிருந்து புறப்பட்ட எயர் இந்தியாவின் ஜம்போ ஜெட் விமானம் ஒன்று சீக்கிய தீவிரவாதிகளால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதும், அதில் பயணம் செய்த 250க்கு மேற்பட்ட பயணிகள் பலியானதும் தெரிந்ததே.

கனடா வெளியுறவு அமைச்சர் இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு பாகிஸ்தான் சென்றுள்ளார்.

## சிவாச்சிரம அன்னதானம் இம்முறை இல்லை

கரைநகர் சிவாச்சிரம ஸ்தாபகரும், தர்மகர்த்தா குழு தலைவரும், முகாமைப் பொறுப்பாளருமான திருமதி தங்கம்மா நடராஜா கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நோய்வாய்ப்பட்டிருக்கும் காரணத்தால் இம்முறை மார்கழி மாத உற்சவத்தின் போது அன்னதானம் வழங்கப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது. காரைநகர் சிவாச்சிரமத்தின் பெயரில் அன்னதானத்திற்கோ வேறு எப்பணிக்கோ நிதியோ அல்லது பொருளுதவியோ திரட்டுவதற்கு எவருக்கேனும் சிவாச்சிரம தர்மகர்த்தா சபையினால் அங்கீகாரம் அளிக்கப்படவில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### அஸ்ஸாம்தேர்தல்முடிவுபற்றிராஜீவ்:

## "பிராந்தியவாதம வளர்கிறது என்று கூறிவிட முடியாது"

(புதுடில்லி)

"அஸ்ஸாம் சட்டசபைத் தேர்தலில் 'அஸ்ஸாம் கனபர்சத்' பெருமளவு இடங்களில் வெற்றி பெற்றிருப்பதைக் கொண்டு இங்கு பிராந்தியவாதம் வளர்ச்சியடைகிறது எனக் கூறமுடியாது" என்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அஸ்ஸாம் தேர்தல் முடிவுகள் பற்றி கருத்து வெளியிடுகையில் தெரிவித்தார்.

1983 ஆம் ஆண்டில் இங்கு தேர்தல்களையே நடத்த முடியாத விதத்தில் கலவரங்களும் குழப்பங்களும் நிறைந்திருந்தன. ஆனால் இங்கு இன்றுதேர்தலை அமைதியான முறையில் நடத்தக் கூடியதாக இருந்ததே ஒரு விதத்தில் தேசிய ஒருமைப்பாட்டுக்குக் கிடைத்த வெற்றியாகும் எனவும் அவர் கூறினார்.

இதேவேளையில், நேற்று நண்பகல் வரை அறிவிக்கப்பட்ட 110 தேர்தல் முடிவுகளில் அஸ்ஸாம் கனபரிசத் 55 இடங்களையும் இந்திரா காங்கிரஸ் 22 இடங்களையும் கைப்பற்றியுள்ளன. அஸ்ஸாம் கன பரிசத் தனித்து ஆட்சி அமைப்பதற்கு 63 இடங்களைப் பெற வேண்டும்.

## ஓடுபாதையில் விமான விபத்து

(ஜெனிவா)

நைஜீரிய விமானம் ஒன்று நேற்று முன்தினம் லக்ஸம்பேக் விமான நிலைய ஓடுபாதையில் ஓடும்போது விபத்துக்குள்ளானது. இந்த விமானம் ஒரு சரக்கு விமானம் என்பதால் இதில் மரணமானவர்களின் விபரங்கள் தெரியவில்லை. விமானம் முற்றாக சேதமடைந்துள்ளது. அதிகாரிகளும், பொலிசாரும் மீட்பு வேலைகளில் ஈடுபட்டுவருகின்றனர். இதன் விபத்துக்கான காரணமும் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## அயர்லாந்தில் மற்றொரு பொலிஸ் நிலைய தாக்குதல்!

(லண்டன்)

வட அயர்லாந்திலுள்ள மற்றுமொரு பொலிஸ் நிலையம் ஐரிஸ் கெரில்லாக்களினால் தாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அயர்லாந்தின் எல்லைப் பகுதியிலுள்ள இப்பொலிஸ் நிலையத்தின் மீது கெரில்லாக்கள் மோட்டார் குண்டுகளால் தாக்கியதாகவும் இதனால் பொலிஸ் நிலையம் முற்றாகச் சேதமடைந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

இச்சம்பவத்தில் பொலிஸார் உட்பட பலர் காயமடைந்துள்ள போதிலும் எவரும் கொல்லப்படவில்லை. பொலிஸ் நிலையத்திற்கு அருகேயுள்ள வீடொன்றும் இச்சம்பவத்தில் முற்றாகச் சேதமாகியுள்ளது,

இச்சம்பவத்திற்கு எந்த ஒரு இயக்கமும் உரிமைகோராத போதிலும் ஐ. ஆர். ஏ. எனப்படும் அயர்லாந்து விடுதலை இராணுவமே இத்தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. கடந்த சில வாரங்களுக்குள் இங்கு நடைபெற்ற ஐந்தாவது பொலிஸ் நிலையத்தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

### இன்று

## கவிஞரின் உடல்நலம் வேண்டி பிரார்த்தனை

கவிஞர் வே. ஐயாத்துரை உடல்நலம் வேண்டி அகில இலங்கை கம்பன் கழகம் நடாத்தும் பிரார்த்தனைக் கூட்டம் அரியாலை கலைமகள் ஆலயத்தில் இன்று காலை ஒன்பது மணிக்கு பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும். கூட்டுப் பிரார்த்தனை, நல்லை ஆதீன குருமகா சந்நிதானத்தின் ஆசியுரை, பிரார்த்தனை உரைகள் இடம்பெறும்.


"தொழிற் பயிற்சி"

உடன் வேலைவாய்ப்புபெற அரிய சந்தர்ப்பம்

- ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங் சகல இன ரெலிவிசன் டெக் திருத்தும் முறை செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்
- Computer Programming Basic-Cobol 4 மாதம் பயிற்சியளிக்கப்படும்
- எலக்ரிக்கல் வயறிங் 3 மாதம்
- வெல்டிங் 3 மாதம்
- Diploma In Draughtsmanship 6 மாதம்
- மோட்டார் றீவைண்டிங், மோட்டர் ரான்ஸ்போமர் வேறு மின்சார பொருட்களும் றீவைண்டிங் பயிற்சியளிக்கப்படும்.

பயிற்சிகள் ஆரம்பம்: 24.12.85

JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவை யருகாமை) யாழ்ப்பாணம்.

விக்கினேஸ்வராக் கல்லூரி வீதி, பெற்றோல் செற் முன்வீதி, நெல்லியடி, கரவெட்டி. R/15206

141, கண்டி வீதி, (யூனியன் பேக்கரி யருகாமை) சாவகச்சேரி.



கிறிஸ்த ஜயந்தி பஜன்

அளிப்பவர்:
திரு. L. திலகநாயகம்போல்
பரி. யோவான் கல்லூரி மண்டபம்
திங்கள் 23-12-85
பி. ப. 3 30
Admission by programme
R/15205



தேவை

தமிழ் தட்டச்சு அனுபவமுள்ள பெண் லிகிதர் தேவை. மாதச் சம்பளம் ரூபா 400/-வழங்கப்படும். 25-12-85க்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்
166/1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். பி/950



அச்சக உரிமையாளர்கட்கும் வியாபாரிகளுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

புதுவருடத்தை முன்னிட்டு கலண்டர் டயரி தயாரிப்பதற்கான உள்நாட்டு வெளிநாட்டு அட்டை (Box Board) Poster Paper, Leatherat marble பேப்பர், வானிஸ் பேப்பர் மற்றும் சகல விதமான பேப்பர் வகைகளும்,

அச்சகத்திற்கு தேவையான மை வகைளும் மலிவு விலையில் கிடைக்கும்.

இன்றே விஜயம் செய்யுங்கள்.

மு. குறிப்பு: வியாபாரிகட்கு விசேட கழிவு உண்டு. தேசிய கடதாசி கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மொத்த வியாபாரி.

பெற்று எசன்ஸ் சப்ளையர்ஸ்
223, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். B 951



அரியாலை சனசமூக நிலையம் பாலர் பாடசாலை

ஆசிரியைப் பதவிகள்

1. பொறுப்பாசிரியை:
தராதரம்:- க. பொ. த (சாதாரணம்) சித்தியுடன் சிறுவர் பாடசாலை போதனா பயிற்சி சான்றிதழ் அல்லது அதையொத்த பயிற்சி நெறி சான்றிதழ்
சம்பள விபரம்:- ரூ 400 — 40X5 — 600.
2 உதவி ஆசிரியை:
தராதரம்:- க. பொ. த (சாதாரணம்) பரீட்சையில் சித்தி.
சம்பள விபரம்;- 250 — 25X5 — 375.
குறிப்பு:- சங்கீத, நடன, ஓவிய, விளையாட்டுத்துறைகளில் தேர்ச்சியுள்ளவர்களுக்கு முன் உரிமை வழங்க படும்.

விண்ணப்பமுடிவு திகதி:- 30-12 1985

தகமைச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் பதிவுத் தபாலில் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி:

செயலாளர்.
அரியாலை சனசமுக நிலையம்,
புங்கங்குளம்,
யாழ்ப்பாணம்.

(R/13898)

# ஈழமுரசு

**கூட்டணி அரசியல் குழுவின் முடிவு**

## வெள்ளவத்தை வீட்டு அறையில் மாவிட்டபுரவாசி மர்ம மரணம்!

(காங்கேசன்துறை)

வியாபார நோக்கத்துடன் வெள்ளவத்தையிலுள்ள வீட்டின் அறையொன்றில் தங்கியிருந்த மாவிட்டபுரத்தைச் சேர்ந்த நடராசா சசிதரன் (30) மர்மமாக மரணமாகிக் கிடக்கக் காணப்பட்டார் இவரது மரணம் பற்றி அவரது பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டது. அவரின் தந்தை கொழும்புக்குச் சென்று, சடலத்தை யாழ்ப்பாணம் எடுத்துவர முயற்சித்தாராயினும், அது முடியவில்லை. சடலம் கொழும்பிலேயே புதைக்கப்பட வேண்டுமென்று அதிகாரிகள் பணித்ததால், மரணத்துக்கானகாரணம் கண்டுபிடிக்கப்படாமலேயே அங்கு அடக்கம் செய்யப்பட்டது.

# கூட்டணியின் யோசனைக்கு இலங்கை அரசு பதில்

# தரும் வரை எந்தவித பேச்சுக்கும் இடமில்லை!

(சென்னை)

இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் நிறுத்தப்படும் வரையும் இந்திய அரசிடம் தாம் தெரிவித்துள்ள யோசனைகள் குறித்து இலங்கை அர டம் இருந்து சாதகமான பதில் கிடைக்கும் வரையும் இனப் பிரச்சினை பற்றி இலங்கைஅரசுடன் நேரடியாக பேச்சுக்கள் நடாத்துவதற்கான நேரடி வாய்ப்பு இல்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியற் பிரிவு தெரிவித்தது.

சென்னையில் நேற்று நடைபெற்ற இதன் கூட்டத்தின் பின் கூட்டணி பிரதிநிதி ஒருவர் காவல் தருகையில் நேரடியாக பேச்சு நடாத்த கொழும்பில் இருந்து எதுவித அழைப்பும் வரவில்லை என்றும் சொன்னர்.

இனப் பிரச்சினையை தீர்க்க தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தெரிவித்த யோசனைகள் குறித்து ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொண்டால மட்டுமின்றி பேச்சு நடைபெறும் சாத்தியம் இல்லை எனவும் அவர் மேலும் கூறினர்.

## ஒரே சூலில் எட்டு பிரசவம்; 5 ஆண்; 3 பெண் குழந்தைகள்

துருக்கியில் இளம் பெண்மணியொருவர் நேற்று ஒரே சூலில் எட்டு குழந்தைகளைப் பிரசவித்ததாக அறிவிக்கப்படுகிறது.

இருபத்தைந்து வயதுள்ள இப் பெண் ஐந்து ஆண்களையும், மூன்று பெண்களையும் பிரசவித்தார். ஒரு மணி நேரத்துக்குள் இந்த பிரசவம் இடம்பெற்றதாம்.

இவற்றின் நிறை ஐநூறு கிராம் முதல் தொள்ளாயிரம் கிராம் வரையும் என அளவிடப்பட்டது. எடை கூடியதை தவிர குறைந்த எடையுள்ள குழந்தைகள் இறந்துவிடும் என டாக்டர்கள் தெரிவித்தனர்.

## வயோதிபர் சுட்டுக் கொலை

(திருமலை)

மூதூரில் தம்பிராசா என்ற எழுபது வயது வயோதிபர் சீருடையினரால சுட்டுக் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படடுள்ளது.

### சுவிஸிலுள்ள...

—1ஆம் பக்கத் தொடர்

மிகவும் பாதகமான விளைவுகளை எதிர் நேக்க வேண்டியிருக்கும் எனவும் மதத் தலைவர்கள் எடுத்துக் கூறினர்கள். நாட்டின் பல பகுதிகளிலும் தமிழர்களுக்கெதிராக இடம் பெற்ற சம்பவங்கள் பற்றியும் இவர்கள் எடுத்துக் கூறினர்கள்.

வண. பிதா மைக்கேல் சாமி, வண. பிதா அம்பலவானர், நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர சுவாமிகள், சுவாமி சித்தூர் பானந்தா, ஜனப் அப்துல் காதர் ஆகிய மதத்தலைவர்கள் இச் சந்திப்பில் கலந்துகொண்டார்கள்.

### படையினர்...

காணா எடுக்கப்படும் முயற்சிகளை இலங்கை அரசின் ஆயுதப் படைகள் குழப்பக் கூடாது என்று பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று தெரிவித்தார்.

ஆயுதப் படையினர் சற்று கட்டுப்பாட்டுடன் நடந்து கொண்டால இப் பிரச்சினைக்குத தீர்வு காண முடியுமென்றும அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

### யாழ்....

திருக்கும் எனவும், இக் குறிப்பிட்ட நேரத்திற்குள் பொதுமகள் சென்று தமது அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

காசுக் கட்டளைக்குப் புகையிரதச் சீட்டுகளைப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்களும் கோட்டை தபால் நிலையத்திலேயே காசுக் கட்டளைகளை பெற்றுக் கொள்ள வேண்டும்.

எனினும் வானெலிக்கான அனுமதிப் பத்திரங்கள் தொடர்ந்தும வழமை போலவே பிரதான தபால் நிலையத்தில் வழங்கப்படும்.

### இசை....

1ம் பக்கத் தொடர்

மென்றும் ஆணைக்குழு உறுப்பினர் கலாநிதி கந்தையா தெரிவித்தார்.

நியமனம் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு:-

செல்வி இ. யசோதா (சுழிபுரம், செல்வி எஸ். விஜேந்துனி (யாழ்ப்பாணம்) செல்வி எம். சுபாஷினி (கொக்குவில்) செலவி வி. விமலாதேவி (உடுப்பிட்டி) செலவி வி. ஜெயந்தி (சுழிபுரம்) செல்வி கே. நாகராசையா (தெல்லிப்பளை) செல்வி கே. புஷ்பவதி (நல்லூர்) செல்வி வி. ராஜேஸ்வரி (சாவகச்சேரி) செல்வி எஸ். பொன்னையா (அளவெட்டி) செல்வி சாந்தலட்சுமி (அளவெட்டி) எஸ். ஏ. சோதிநாதன் (மானிபபாய்) செலவி எஸ். மதிவதனி (திருமலை) செலவி ஆ. ஜெயவரதனி (திருமலை) செல்வி எஸ். சுபாஷினி (சாவகச்சேரி) செல்வி எஸ. சீவமலர் (கொடிகாமம) செல்வி ஏ. லலிதாம்பிகை (கோண்டாவில்) செல்வி எஸ். நகுலாம்பிகையம்மை (கோண்டாவில்) செல்வி கே. சந்திரவதனி (கனுவாஞ்சிக்குடி) செல்வி கே. மதவமனேகரி (காரைநகர்) செல்வி எஸ். பிரியதாசினி (கோண்டாவில்) செலவி என். யசோதா (தெல்லிப்பளை) செல்வி சுமதி துரைசிங்கம் (கோப்பாய்) செல்வி கனகாம்பிகை (சாவகச்சேரி) திரு. கே. பரமேஸ்வரன் (வரணி) (தொடரும்)

## இன்று வைத்தீஸ்வரா பரீட்சை

இன்று வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஆண்டு ஏழு (வகுப்பு - 6) க்கான பிரவேசப் பரீட்சை வித்தியாலய மண்டபத்தில் காலை ஒன்பது மணிக்கு நடைபெறவுள்ளது.

## மட்டுநகரில் குண்டு வீச்சு

(மட்டுநகர்)

மட்டக்களப்பு பழைய பொலிஸ் நிலையத்திற்கு முன்னல் காவல் நின்ற பொலிஸாரை நோக்கி இனம் தெரியாதவர்களால் கிரனேட் வீசப்பட்டதையடுத்து மட்டுநகரில் பெரும் பதற்றம் நேற்றுககாலை உருவானது.

பலத்த சத்தத்துடன் குண்டு வெடித்ததாயினும, எவருக்கும் காயமேற்படவலலை. ஆயினும் நகரின் கடைகள் திறககப்பட்டு, நிலைமை வழமைக்குத் திரும்ப நண்பகலாகியது.

### ராணுவ...

மடைந்த ராணுவ வீரர் ஒருவர் கொழும்பு கொண்டு செல்லப்பட்டதாக அங்கிருநது பிந்திக் கிடைத்த தகவல் மூலம் தெரியவந்துள்ளது.

### மகனுக்கும்...

ருக்கு காட்டிக் கொடுத்தவர் என்ற குற்றச்சாட்டில் மரண தண்டனை வழங்கப்பட்டது. இவரது தந்தையான சிவபாக்கியம் (கிராம சேவையாளர்) என்பவருக்கும் இதே குற்றச்சாட்டில் முன்னர் மரண தண்டனை வழங்கப்பட்டது.

### மருத்துவ...

மிட்டுக கத்தக்கத்த இருவர் வான் ஒன்றில் அந்த மாணவி படிப்பு முடிந்து செல்லும் போது கடத்தினராம்.

சம்பந்தப்பட்ட வான் சுண்டுக்குளி பழைய பூங்காச் சந்தியில் விபத்துக்குளளானதால் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி குறிப்பிட்ட மாணவி தப்பியோடி, தனது வீட்டுக்கு சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

### ஹெலிகப்டர்....

...1ஆம் பக்கத் தொடர்

காயமடைந்தவர்களாகும்.

துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களால் பதற்றமடைந்த இவர்கள் இருவரும் அவசரப்பட்டு இறங்கியபோது தடக்கி விழுந்ததால் அவர்களுக்கு மேலாக மினிபஸ் சென்றதாலேயே இவர்கள் படுகாயமடைந்தனர்.

## 472 தமிழ் பட்டதாரிகட்கு ஆசிரிய நியமனம் கிடைத்தது

மொத்தம் 472 தமிழ் மொழி மூல பட்டதாரிகளுக்கு கல்வி அமைச்சு ஆசிரிய நியமனம் வழங்கத் தீர்மானித்துள்ளது. இவ்வாறு நியமனம் பெறத் தெரிவானவர்களின் பெயர் விபரங்களை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

இவர்களின் பெயர் விபரங்கள் இன்றுமுதல் தொடர்ச்சியாக 'ஈழமுரசு'வில் வெளிவரும்:-

வீ. மனேகரன் அல்வாய்; எஸ். பாஸ்கரன் வேலணை; எஸ்.விவேகானந்தன் வேலணை; எம். பாலசிங்கம் கொடிகாமம்; கே. மஙகளேஸ்வரன் கொடிகாமம்; ஆர். ஜமுனு பருத்தித்துறை; எம். ஜெயலட்சுமி பருததித்துறை; என். இராஜமோகன நல்லூர்; எஸ். நந்தின் உடுவில; செலவி டி. நடராசா பருத்தித்துறை; செல்வி ஆர். வி. சாமா சுன்னுகம்; செல்வி எஸ். செல்லத்துரை நல்லூர்; செல்வி வை. செல்லமுதது அச்சுவேலி; ஜீ. விஸ்வதேவி ஆனைப்பந்தி; ஜீ. இராசேஸ்வரி கொக்குவில; ரீ. சாந்தி யாழ்ப்பாணம்; வீ. இராஜகுலசிங்கம் வரணி; ஆர். குலசெல்வராணி வேலணை, ஏ. சுந்தரலிங்கம் கரவெட்டி;

செல்வி. ஏ. செல்லத்துரை நல்லூர் தெற்கு; செல்வி. கே. சேதுகாவலர் மானிப்பாய்; ரீ. திருச்செல்வி வட்டுக்கோட்டை; திருமதி ஆ. முத்துத்தம்பி கோணடாவில்; கே. சுசீலா சாவகச்சேரி; பி. சந்திரசேகரம் தெல்லிப்பளை; செலவி. ஏ. செல்வரத்தினம் கொக்குவில்; செல்வி. ரீ. கந்தசாமி கொக்குவில்; ஏ. தனலக்சுமி நீர்வேலி; பீ. புஷ்பராணி கொடிகாமம்; வீ. வனஜா சுழிபுரம்; செல்வி. கே. கனகரததினம் மீசாலை; செல்வி. எஸ். மின்னெளிவதனம் வல்வெட்டித்துறை; செல்வி. எல். கனகசிஙகம் கோண்டாவில்; செல்வி. வீ. அரியரத்தினம் மானிப்பாய்; எஸ். கௌரியம்பாள் புன்னாலைக்கட்டுவன; கே. கிருத்ர குகன் யாழ்ப்பாணம்; எஸ். செல்வராஜா கைதடி; செல்வி. ரீ. குந்தரி சித்தன்கேணி; எஸ. சறகுணதேவி சித்தன் கேணி;

செல்வி. எம். சண்முகநாதன் கொக்குவில்; கே. நிர்மலா நல்லூா; கே. சாந்தகுமாரி மீசாலை; ஜீ. சசிகலா நல்லூர்; கே. பிந்தவதி கோண்டாவில்; ரீ. மீனலோஜினி கோப்பாய்; செலவி. என. ஈ. சூசைதாசன் கிளிநொச்சி; எஸ மாணிக்கராசா பரந்தன்; ரீ. சிவயோகதயாபரி அப்பாள் முல்லைத்தீவு; வீ. பாமா முளளியவலை; எம். ரகுநாதன் முளளியவலை; செல்வி. எஸ். லோதுமலை திருககேதீஸ்வரம்; செலவி. என். ஆர். சாந்திப்பிள்ளை உயிலங்குளம்; என. ரனிஸ் லோஸ் யாழ்ப்பாணம்; செலவி. என். குமாரசிங்கம் வவுனியா; செல்வி. எம். மாரிமுத்து திருகோணமலை; திருமதி. எஸ். சிவஐங்கரன திருமலை; செல்வி. பி. சண்முகம திருமலை; எஸ்.பரமலங்கம் கிளிவெட்டி; சகோ. பி. பி. ஞானப்பிரகாசம் திருமலை; எல. ரீ. அபமா புல்மோட்டை; செல்வி. சற். பிறிட்ஜட திருமலை; செல்வி. கே. நித்தியபிரகன் மூதூர்;

எஸ். முகம்மது மூதூர்; கே. சுந்தரமூாததி மூதூர்; யூ. ஏ. கபூர் மூதூர்; செலவி, எம். யூ. பசியா மூதூர்; யூ. எல். ஏ. கபூர் கின்னயா; எம். பூபாலபிலளை யாழ்ப்பாணம்; கே. கனகசபாபதி கொட்டடி; செல்வி. எஸ் கதிரவேல் இளவாலை; செல்வி. வீ. வேலுப்பிள்ளை அல்வாய்; எஸ். எம். ஜெயலக்சுமி சுன்னுகம்; செல்வி. கே. கிருஷ்ணவேணி சுழிபுரம்; செல்வி. கலாநிதி கொடிகாமம்; தருமதி. எஸ். விக்னேஸ்வரன் உடுவில்;

[தொடரும்]

### கொழும்புத்துறை...

1ம் பக்கத் தொடர்

மைதானத்தில் பெருமளவிலான இராணுவத்தினர் ஹெலிகப்டர் மூலமாககொண்டுவந்து இறக்கப்பட்டார்கள். மூன்று ஹெலிகப்டர்கள் மாறி மாறி இதனைச் செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து இப் பகுதியில் பெரிதும் பதற்றம் ஏற்பட்டது.

நண்பகல் இரண்டு மணியளவில் வித்தியாலய மைதானத்தின் பின்பக்கமாகவுள்ள புகையிரதப் பாதையூடாக நடை பவனியாக பெருமளவு இராணுவத்தினர் வந்தபோது அப்பகுதியில் சரமாரியாக துப்பாக்கிச் சூட்டு, குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்கத் தொடங்கியது. அதே நேரம் ஹெலிகப்டர் ஒன்றும் வானத்தில் வட்டமிட்டவாறு துப்பாககி வேட்டுகளைத் தீர்த்தது.

இதே வேளையில் பதுங்கியிருந்த இளைஞர் ஒருவர் இராணுவத்தினரை நோக்கி சரமாரியாக துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்ததாகவும் இதனுல் நான்கு இராணுவத்தினர் இரத்தம் பெருகிய நிலையில் அவ்விடத்திலேயே வீழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி துப்பாககிப் பிரயோகம் செய்த இளைஞரும் அதே இடத்தில் சுட்டுக கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

### ஊர்காவற்...

1ம் பக்கத் தொடர்

நீதவான் திரு. கதிரவேற்பிள்ளை தம்மை அறிமுகப்படுத்திய பின்னரும், வழித்தடையை நீக்கமறுத்து, அவரை அவமரியாதை செய்ததாக குறிப்பிட்ட ஊர்காவற்படையினருக்கு எதிராக புகார் செய்யப்பட்டது.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 21-12-85 சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336